# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110284

1. District மாவட்டம்: அரியலூர்
   PS காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு
   Year ஆண்டு: 2020 FIR No. மு.த.அ. எண்: 04 Date நாள்: 15.09.2020
2. (i) Act சட்டம்: I.P.C — Sections பிரிவுகள்: 409, 420, 465, 468 & 471
   (ii) Act சட்டம்: P.C. Act — Sections பிரிவுகள்: 13(1)(a) of P.C. Act 1988
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: (as amended in 2018)
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 2018 Date to : நாள் வரை 2019
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.9.2020 Time : நேரம் 11. மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 15.9.2020 Time : நேரம்
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ஊ.த.க. பிரிவு இரகசிய விசாரணை தகவல்.
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 70. கி.மீ. வட கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address முகவரி பெரிய கிருஷ்ணாபுரம், ஊராட்சி ஒன்றியம். ஆண்டிமடம் அரியலூர் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R.சந்திரசேகர்.
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் கா.து. கண்காணிப்பாளர்
   (g) Address : முகவரி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அரியலூர்.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு.T. [illegible] சேகரன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆண்டிமடம் அரியலூர். (தற்போது ஊரக வளர்ச்சி துறை அரியலூர்)
   2) திரு.R. [illegible] ஒன்றிய பணி மேற்பார்வையாளர். ஊராட்சி ஒன்றியம். ஆண்டிமடம் (தற்போது ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம்)
   3) திருமதி. S.சத்தியபாமா ஊராட்சி செயலர் பெரிய கிருஷ்ணாபுரம் ஆண்டிமடம் அரியலூர்
8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   8) Vigilance sent to DV.AC. Chennai and there after this case was registered and hence the delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

15.09.2020ம் தேதி 11.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களிடமிருந்து வரப்பட்ட தபாலை பெற்று **VR.No.26768/2019/RDP/ARL** நாள்: 11.09.2020 -இல் கண்ட உத்தரவுப்படி முதல் தகவல் அறிக்கை வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு,

எதிரி-1 திரு.**T**.குணசேகரன், வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி), ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 18.07.2018 முதல் 12.05.2020 வரை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்துள்ளார். தற்பொழுது அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊரக வளர்ச்சி துறையில் பணிபுரிந்து வருகிறார்.

எதிரி-2 திரு.**R**.சுகுமார், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய பணி மேற்பார்வையாளராக 09.01.2012 முதல் 22.01.2015 வரையும் மற்றும் 25.10.2018 முதல் 18.05.2020 வரை பணிபுரிந்துள்ளார். தற்பொழுது ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறார்.

**Separate Computer Typed Sheet Attached.**

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Inr V. VANATHI Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC: Ariyalur on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................ பதவி ................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
Suo motto

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15/9/2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் R. CHANDRASEKAR
Rank: நிலை DSP/ V&AC/Ariyalur No. எண்

எதிரி-3 திருமதி.சத்தியாபதி, அவர்கள் 07.03.2019 முதல் அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம், பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சி செயலராக பணிபுரிந்து வருகிறார். இவர்கள் மூவரும் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 2 (c)-ன்படி பொது ஊழியராவார்கள்.

எதிரிகள் மூவரும் அவர்களுக்கு உண்டான அரசு பணிகளை நேர்மையற்ற முறையில் சரியாக செய்யாமலும், அரசு ஒதுக்கீடு செய்யும் தொகைகளுக்கு உண்டான பணிகளை செய்யாமலும், செய்ததாக பொய்யான ஆவணங்களை தயார் செய்து கூட்டு சேர்ந்து அரசு பணத்தை மோசடி செய்து எடுத்துக்கொண்டும், பெரிய கிருஷ்ணாபுரம் ஊராட்சி கட்டப்பட வேண்டிய தனிநபர் இல்ல கழிவறையை கட்டாமல், கட்டியதாக பொய்யான ஆவணங்களை தயார் செய்து செலவீன தொகையை மோசடியாக பெற்றுள்ளனர்.

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சியில் தனி நபர் இல்ல கழிவறைகள் கட்டுவதற்கு அரசாணை எண்46, ஊரக வளர்ச்சி மற்றும் மாவட்ட ஊராட்சி (ம.அ.தி.-1)துறை, நாள் 26.03.2015-ல் தனி நபர் இல்லக் கழிப்பறை பணிகளை திட்டமிடுதல், செயலாக்கம் மற்றும் அதன் உபயோகத்தை கண்காணித்தல் குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் சம்பந்தமாக ஆணையிடப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் உத்தரவு ந.க.எண்.ஆ4/2366/18-ன்படி தூய்மை பாரத இயக்கம்(ஊரகம்)/மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 2018-2019 ஆம் ஆண்டு அனைத்து ஊராட்சிகளிலும் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட நிர்வாக அனுமதி மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எதிரி-3 திருமதி.சத்தியாபதி, ஊராட்சி செயலர் அவர்கள் தூய்மை பாரத இயக்கம்(ஊரகம்)/மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 2018-2019 ஆம் ஆண்டில் தனிநபர் இல்லக் கழிப்பறை திட்டத்தின் கீழ் கழிப்பறை கட்ட தகுதியானவர்கள் என சான்று வழங்கி, ஆதார், குடும்ப அட்டை நகல் இணைத்து கீழ்காணும் பயனாளிகளின் பட்டியலை வழங்கி உள்ளார். அதன் அடிப்படையில், ஆண்டிமடம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களின் செயல்முறைகள் எண் ஆ4/35/19ன்படி பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சியில் உள்ளவர்கள் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட சமர்ப்பித்த விண்ணப்பங்களை ஊராட்சி செயலர் அவர்களின் சான்றுடன் சரிபார்த்து சான்றளிக்கப்பட்டு நிபந்தனைகளுடன் கீழ்காணும் 10 பயனாளிகளுக்கு 1)திரு.D.செல்லத்தம்பி, த/பெ.தெய்வம், காலனி ரோட்டு தெரு, பெரியகிருஷ்ணாபுரம், 2) திரு.A.துரையப்பன், த/பெ.அழகன், நடுத்தெரு, பெரியகிருஷ்ணாபுரம், 3)திரு.G.இளங்கோவன், த/பெ.கணேசன், நடுத்தெரு (காலனி), பெரியகிருஷ்ணாபுரம், 4)திருமதி.M.மஞ்சுளா, க/பெ.மணிகண்டன், நடுத்தெரு, பெரியகிருஷ்ணாபுரம், 5)திரு.R.ராஜதுரை, த/பெ.ராமாமிர்தம், நடுத்தெரு, பெரியகிருஷ்ணாபுரம், 6)திரு.V.சத்தியகீர்த்தி, த/பெ.வில்லாயுதம்,

கீழத்தெரு. பெரியகிருஷ்ணாபுரம். 7)திரு.R.சுரேஷ். த/பெ.ராசாங்கம். நடுத்தெரு. பெரியகிருஷ்ணாபுரம். 8)திரு.K.தங்கசாமி. த/பெ.குப்பன். மேலத்தெரு. பெரியகிருஷ்ணாபுரம். 9)திரு.K.காசிநாதன். த/பெ.கண்குனித்தான். நடுத்தெரு. பெரியகிருஷ்ணாபுரம். மற்றும் 10)திரு.M.வெற்றிவேல். த/பெ.மாயகிருஷ்ணன். ரோட்டு தெரு. பெரியகிருஷ்ணாபுரம் ஆகியோர்களுக்கு **எதிரி-1.திரு.T.குணசேகரன்,** வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அவர்களால் தனிநபர் இல்ல கழிப்பறை கட்டுவதற்கு வேலை உத்தரவு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எதிரி-2 **திரு.R.சுகுமார்,** ஒன்றிய பணி மேற்பார்வையாளர் (Overseer) அவர்கள் பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சியில் மேற்கண்ட பயனாளிகள் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டினார்களா என்று பார்வையிடாமலேயே, கட்டப்படாத தனிநபர் இல்லக் கழிப்பறைகளுக்கு கட்டி முடிக்கப்பட்டதாகவும், அதை பார்வையிட்டு அளவீடுகள் செய்ததாக சான்று வழங்கியும், Valuation Cerificate தயார் செய்தும் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் சமர்ப்பித்துள்ளார். எதிரி-3 **திருமதி.சத்தியாபதி,** ஊராட்சி செயலர், பெரியகிருஷ்ணாபுரம் அவர்கள் மேற்படி பயனாளிகள் கட்டப்படாத தனிநபர் இல்லக் கழிப்பறையை, கட்டி முடிக்கப்பட்டதாக தவறான பயனாளியுடன் போலியான புகைப்படம் எடுத்து வட்டார வளர்ச்சி அலுவலரிடம் சமர்ப்பித்துள்ளார். மேலும் மேற்படி பயனாளிகள் கழிவறை தொகையை ஊராட்சி செயலர் பெயரில் வழங்க விருப்பம் தெரிவித்துள்ளதாக பொய்யான கடிதம் தயார் செய்து கொடுத்துள்ளார். எதிரி-1 **திரு.T.குணசேகரன்,** வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அவர்கள் பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சியில் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டப்பட்டதா என்று கள ஆய்வு செய்யாமலேயே ஒவ்வொரு பயனாளிக்கும் உண்டான தொகை ரூ.12,000/-த்தை நிதி ஒதுக்கீடு செய்து 10 பயனாளிகளுக்கும் உண்டான தொகை மொத்தம் ரூ.1,20,000/-த்தை ஊராட்சி செயலர் திருமதி.சத்தியாபதி அவர்களின் பெயருக்கு காசோலை வழங்கி அரசுக்கு மோசடி செய்துள்ளார்.

எதிரி-1 திரு.T.குணசேகரன், வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி), எதிரி-2 திரு.R.சுகுமார், ஒன்றிய பணி மேற்பார்வையாளர், எதிரி-3 திருமதி.சத்தியாபதி, ஊராட்சி செயலர், பெரியகிருஷ்ணாபுரம் ஆகியோர் அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சியில் தூய்மை பாரத இயக்கம்(ஊரகம்)/மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 2018-2019 ஆம் ஆண்டில் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டியதில் 10க்கும் மேற்பட்ட நபர்களின் பெயர்களில் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டாமல் கட்டியதாக பொய்யான ஆவணங்களை தயார் செய்து அதை பயன்படுத்தி உண்மை என்று நம்பவைத்து அரசுக்கு சுமார் ரூ.1,20,000/- இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள். தனிநபர் இல்ல கழிவறை கட்டுவதற்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை நேர்மையற்ற முறையில் எதிரிகள் மோசடி செய்யும் உட்கருத்துடன் கூட்டு சேர்ந்து கையாடல் செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தி, தான் சுயலாபம் அடைந்து மோசடி செய்துள்ள குற்றத்தை புரிந்துள்ளனர்.

143



எனவே மேற்படி எதிரிகள் மீது அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 04/2020 சட்டப்பிரிவுகள் 409, 420, 465, 468, 471 IPC r/w 13 (1) (a) of PC Act 1988 (as amended in 2018) ன்படி 15.09.2020ஆம் தேதி 11.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன் அசலை கனம் முதன்மை குற்றவியல் நீதிமன்ற நடுவர் /சிறப்பு நீதிபதி அரியலூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகல் நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

15/9/2020.
DSP/VAC/Ariyalur.